# ஈரோடு மாவட்ட நிர்வாகம் மற்றும் சுற்றுலா துறையுடன் இணைந்து நடத்திய சமத்துவ பொங்கல் விழா

## கலெக்டர் ச.கந்தசாமி தலைமையில் நடைபெற்றது



ஈரோடு,ஜன.14-

ஈரோடு மாவட்டம், கலெக்டர் அலுவலக வளாகத்தில் கலெக்டர் ச.கந்தசாமி தலைமையில் மாவட்ட நிர்வாகம் மற்றும் சுற்றுலாத்துறையுடன் இணைந்து நடத்திய சமத்துவ பொங்கல் விழா 2026 நடைபெற்றது.தமிழகத்தின் பாரம்பரிய பெரு விழாவாகத் திகழும் தைத் திருநாள் பொங்கலை சிறப்பிக்கும் வகையில் பொதுமக்கள் அனைவரும் ஒன்று கூடி மகிழ்ந்து கொண்டாடும் நோக்குடன் பொங்கல் விழா நடத்தப்படுகிறது.

பொங்கல் பண்டிகையின் உண்மையான பண்பாட்டுச் சிறப்புகளை இளைய தலைமுறைக்கு அறிமுகம் படுத்துவதோடு பொங்கல் மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் கொண்டாடிடும் வகையில் கலெக்டர் அலுவலக அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பொங்கல் விழாவினை கொண்டாடினார்.இன்றைய தினம் கலெக்டர் பொங்கல் வைக்கும் நிகழ்ச்சியை துவக்கி வைத்து அரசு அலுவலர்களிடையே நடைபெற்ற பாரம்பரிய விளையாட்டு போட்டிகளான கோலப்போட்டி, கயிறு இழுத்தல், உரி அடித்தல், லக்கி கார்னர் போன்ற விளையாட்டு போட்டிகளை துவக்கி வைத்தார்.

தொடர்ந்து, மாணவ மாணவியர்கள் சிலம்பம், வால் வீச்சு மகுடு வீச்சு, போர் சிலம்பம், அலங்கார சிலம்பம் ஆகிய பாரம்பரிய விளையாட்டுகளை நடத்தினார்கள். இன்றைய தினம் கலெக்டர் தப்பாட்ட கலைஞர்களுடன் இணைந்து பறை இசை கருவியினை இசைத்தார். மேலும், மயிலாட்டம், காளையாட்டம், மங்கள இசை போன்ற பல்வேறு கலை நிகழ்ச்சிகளை நடைபெற்றது. இப்போட்டிகளில் வெற்றி பெற்ற அரசு அலுவலர்களுக்கு பரிசுகளை வழங்கி பாராட்டுகளை தெரிவித்தார். இவ்விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், மாவட்ட வருவாய் அலுவலர் (நிலம்) மஞ்சுளா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (பொது) (பொ) ராம்குமார், லோகநாதன் (வேளாண்மை), உதவி சுற்றுலா அலுவலர் பழனிச்சாமி, உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# ஊட்டியில் 102 பயனாளிகளுக்கு ரூ.7.12 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள்: நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா வழங்கினார்



ஊட்டி, ஜன.14-

ஊட்டியில் 102 பயனாளிகளுக்கு ரூ.7.12 இலட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா வழங்கினார்.

நீலகிரி மாவட்ட கலெக்டர் கூடுதல் அலுவலகத்தில், பல்வேறு துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து, நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா தலைமையில்;, மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில், சம்மந்தப்பட்ட அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் வனத்துறை, தேயிலை வாரியம், போக்குவரத்துத்துறை ஆகிய துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் மற்றும் நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, பொதுப்பணித் துறை ஆகிய துறைகளின் சார்பில் மேற்கொள்ளப் பட்டு வரும்; வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடித்து, அதற்குண்டான பட்டியலை சம்மந்தப்பட்ட அலுவலர்கள் தயார் செய்து, மாவட்ட கலெக்டரிடம் வழங்கி, இம்மாத இறுதிக்குள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.அதனை தொடர்ந்து, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் 92 பயனாளிகளுக்கு தலா ரூ.5,042-மதிப்பில் விலையில்லா தையல் இயந்திரங்களையும், முதலமைச்சரின் இரண்டு பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 10 பயனாளிகளுக்கு தலா ரூ.25,000- மதிப்பில் வைப்பு பத்திரங்கள் என மொத்தம் 102 பயனாளிகளுக்கு ரூ.7.12 இலட்சம் மதிப்பில் நலத் திட்ட உதவிகளையும் வழங்கினார். மேலும், மசினக்குடி ஊராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்;திட்டத்திற்காக பசுமை வரித்திட்டத்தின் கீழ் ரூ.12 இலட்சம் மதிப்பில் பிக்கப் வாகனத்தினை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

முன்னதாக, மாவட்ட கலெக்டர் கூடுதல் அலுவலகத்தில், மாவட்ட கலெக்டர் ; தலைமையில், நடைபெற்ற பொங்கல் திருவிழா நிகழ்ச்சியில், வருவாய்த்துறை அலுவலர்கள், ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அனைவருக்கும் மாவட்ட கலெக்டர் பிளாஸ்டிக்கிற்கு மாற்றாக மீண்டும் மஞ்சப் பையில் பொங்கல், கரும்பு, பழவகைகள் ஆகியவற்றினை வழங்கி, பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்தார்.மேலும், எதிர்வரும் சட்டமன்ற பொது தேர்தலில் வாக்காளர்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்பதற்காக, மலைகளின் குரல் நமது வாக்கு என்ற மையக்கருத்தினை வைத்து, சுய உதவிக்குழுக்கள் மூலம் நீலா (நீலகிரி பூச்சி பிடிப்பான்) உருவம் வரையப்பட்டு, விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதை மாவட்ட கலெக்டர் நேரில் பார்வையிட்டார். இந்நிகழ்வுகளில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.எஸ். நிஷா, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அபிலாஷா கௌர் , மாவட்ட வன அலுவலர் (நீலகிரி கோட்டம்) கௌதம், , துணை இயக்குநர்கள் முதுமலை புலிகள் காப்பகம் கணேசன், வித்யாதர், மாவட்ட வருவாய் அலுவலர் மா.நாராயணன், குன்னூர் சார் ஆட்சியர் சங்கீதா நகராட்சி ஆணையாளர்கள் கணேசன் (ஊட்டி), இளம்பருதி (குன்னூர்கோத்தகிரி), சக்திவேல் (நெல்லியாளம்கூடலூர்), பொதுபணித்துறை செயற்பொறியாளர் ரமேஷ், மாவட்ட சமூகநல அலுவலர் பிரவீணாதேவி, ஊட்டி நகர் மன்ற துணைத்தலைவர் ரவிக்குமார், மற்றும் பல்வேறு அரசுத்துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நீலகிரி கலெக்டர் அலுவலகத்தில்

# கலெக்டர் தலைமையில் சமத்துவ பொங்கல் விழா: ஆடிப்பாடி மகிழ்ந்த அரசு அதிகாரிகள்



ஊட்டி, ஜன.13-

நீலகிரி கூடுதல் கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் லட்சுமி பவ்யா தலைமையில் சமத்துவ பொங்கல் விழா கோலாகலமாக கொண்டாடப்பட்டது. இதில் அரசு அதிகாரிகள் ஆடிப்பாடி மகிழ்ந்தனர்.

தமிழகத்தில் போகி பண்டிகை, தை பொங்கல், மாட்டு பொங்கல் மற்றும் காணும் பொங்கல் என பொங்கல் பண்டிகை நான்கு நாட்கள் விமரிசையாக கொண்டாடப்பட உள்ளது. ஏற்கனவே அரசு மற்றும் பள்ளி கல்லூரிகளில் பொங்கல் விழா கொண்டாட்டங்கள் பெரும்பாலும் நடந்து முடிந்துவிட்டது. இந்த நிலையில் அரசு அலுவலகங்களில் அரசு ஊழியர்கள் பொங்கல் கொண்டாட்டத்தில் ஈடுபட தமிழக அரசு உத்தரவிட்டது. இதன் காரணமாக மாநிலம் முழுவதும் உள்ள அரசு அலுவலகங்கள் பொங்கல் கொண்டாட்டத்தில் மூழ்கின.

இந்த நிலையில் நீலகிரி மாவட்டம் ஊட்டி கூடுதல் கலெக்டர் அலுவலகத்தில் பொங்கல் கொண்டாட்டம் நேற்று நடைபெற்றது.

விழாவில் கலெக்டர் லட்சுமிபவ்யா தண்ணீரு தலைமை தாங்கி, மண்பானையில் அரிசியை போட்டு பொங்கல் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். பொங்கல் விழா என்பதால் ஆண்கள் வேட்டி சட்டையிலும், பெண்கள் சேலை அணிந்து பாரம்பரிய உடைகள் அணிந்து வந்திருந்தனர். அரசு அதிகாரிகள் முதல் ஊழியர்கள் வரை அனைவரும் ஆடி பாடி மகிழ்ந்தனர். இதன் பின்னர் பொங்கல் வெந்தவுடன் பூஜைகள் செய்து அனைவருக்கும் பொங்கல் வினியோகிக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து அரசு ஊழியர்களுக்கு பல வகைகள் கரும்பு அடங்கிய பொங்கல் பரிசை கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு வழங்கினார். அப்போது மீண்டும் மஞ்சப்பை இயக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் பொங்கல் பரிசு மஞ்சப் பையில் போட்டு வழங்கப்பட்டது. முடிவில் ஊழியர்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்ந்தனர்.

நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்எஸ்.நிஷா, கூடுதல் கலெக்டர் அபிலாஷா கவுர், மாவட்ட வன அலுவலர் கவுதம், மாவட்ட வருவாய் அலுவலர் மா.நாராயணன், குன்னூர் சார் ஆட்சியர் சங்கீதா, முதுமலை புலிகள் காப்பக துணை இயக்குநர்கள் கணேசன், வித்யாதர், நீலகிரி மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் சையது முகம்மத், உள்பட பலர் கலந்து கொண்டனர்.

முன்னதாக பொங்கல் விழா நிகழ்ச்சியில், நடைபெற உள்ள சட்டமன்ற பொது தேர்தலில் வாக்காளர்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்பதனை வலியுறுத்தும் வகையில், மகளிர் சுய உதவி குழுக்கள் மூலம் மலைகளின் குரல் நமது வாக்கு என்ற மையக் கருத்தினை வலியுறுத்தும் வகையில், நீலா (நீலகிரி பூச்சி பிடிப்பான்) உருவம் வரையப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. பொங்கல் விழாவையொட்டி கூடுதல் கலெக்டர் அலுவலக வளாகம் முழுவதும் தோரணங்கள் கட்டி, கோலமிடப்பட்டு வண்ணமயமாக காட்சி அளித்தது.

# இது நம்ம ஆட்டம் விளையாட்டுப் போட்டிகள் நீலகிரியில் 6 இடங்களில் நடக்கிறது: 16 வயது முதல் 35 வயதுடையோர் பங்கேற்கலாம்

ஊட்டி, ஜன.14-

நீலகிரி மாவட்டத்தில் 6 இடங்களில் நடைபெறும் இது நம்ம ஆட்டம் விளையாட்டுப் போட்டிகளில் 16 வயது முதல் 35 வயதுடைய அனைவரும் பங்கேற்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது-

நீலகிரி மாவட்டத்தில், வட்டார அளவிலான ‘இது நம்ம ஆட்டம் - 2026’ என்ற தலைப்பிலான முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு விழாவினை கொண்டாடும் விதமாக பல்வேறு விளையாட்டு போட்டிகளானது, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால், நீலகிரி மாவட்டத்தில் கீழ்கண்ட இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி ஊட்டியில் மலைப்பகுதி மேம்பாடு;டுத் திட்ட திறந்த வெளி விளையாட்டரங்கம்; மற்றும்; அரசு கலைக்கல்லூரி மைதானம் ஆகிய இடங்களிலும், கோத்தகிரி காந்தி மைதானம், குன்னூர் அறிஞர் அண்ணா மேல்நிலைப்பள்ளி மைதானம், கூடலூர் மார்த்தோமா நகர் விளையாட்டு அரங்கம் மற்றும் அரசு மேல்நிலைப்பள்ளி மைதானம் ஆகிய இடங்களில் வரும் 22-ந் தேதி முதல் 25-ந் தேதி வரை நடைபெறுகிறது. மேற்படி, இடங்களில் நடைபெறயுள்ள விளையாட்டு போட்டிகளில் 16 முதல் 35 வயதுள்ள அனைவரும் கலந்து கொள்ளலாம் என நீலகிரி மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.;

# நாட்டு வெடிகுண்டை கடித்த குட்டி யானை பலியான விவகாரம்: விவசாயி கைது

## வனத்துறையினர் நடவடிக்கை



ஈரோடு ஜன.14 -

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்துக்குட்பட்ட கடம்பூர் அருகே செங்காட்டில் கடந்த 10-ம் தேதி குட்டி யானை ஒன்று இறந்து கிடந்தது. இது குறித்து அப்பகுதி மக்கள் அளித்த தகவலின்படி கடம்பூர் வனத்துறையினர் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டனர்.அப்போது வாய் கிழிந்து ரத்த வெள்ளத்தில் குட்டி யானை இறந்து கிடந்தது தெரிய வந்தது. புலிகள் காப்பக கால்நடை மருத்துவர் சதாசிவம் உடற்கூறு பரிசோதனை செய்தார். இதில் இரண்டு வயதான பெண் குட்டி என்பது தெரிய வந்தது. விலங்குகளை வேட்டையாடும் கும்பல் அவுட்டு காயை (நாட்டு வெடிகுண்டு) வனப் பகுதிகளில் வீசுவது வழக்கம். இந்த வகையில் வீசப்பட்டிருந்த ஒரு அவுட்டு காயை கடித்ததால் வாய் சிதறி அந்த குட்டி யானை பலியாகி இருப்பது தெரிய வந்தது.

இதுகுறித்து விசாரணையை வனத்துறையினர் தீவிரப்படுத்தினர். அப்போது அதே பகுதியை சேர்ந்த விவசாயி காளிமுத்து (43) என்பவரை வனத்துறையினர் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மழைநீர் உயிர்நீர்

# நீலகிரியில் இன்று முதல் 4 நாட்களுக்கு பொங்கல் விழா: பொது மக்கள் கலந்து கொள்ள கலெக்டர் அழைப்பு

ஊட்டி, ஜன.14-

நீலகிரி மாவட்டத்தில் இன்று முதல் 4 நாட்களுக்கு பொங்கல் விழா நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்தால் இவ்விழாக்களில் பொதுமக்கள் திரளாக கலந்து கொள்ள மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு அழைப்பு விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது-

தமிழக முதலமைச்சர் அறிவுறுத்தலின்படி- ‘நம்ம ஊரு திருவிழா மற்றும் சமத்துவ பொங்கல்’ என்ற தலைப்பில் நீலகிரி மாவட்டத்தில், உழவர் திருநாளான பொங்கல் திருவிழாவினை சிறப்பாக கொண்டாடும் விதமாக 14.01.2026 முதல் 18.01.2026 வரை பல்வேறு கலைநிகழ்சிகள் பின்வருமாறு ஏற்பாடு செய்யயப்பட்டுள்ளது.

அதன்படி இன்று(14.01.2026)காலை 10.00முதல்01.00மணி வரை சுற்றுலா த்துறை சார்பில் ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில ;சுற்றுலா பொங்கல் திருவிழாவும், 15-ந் தேதியன்று கோத்தகிரி நேரு பூங்காவில் 10.30 மணி முதல் 12.30 மணிவரை கலை பண்பாட்டுத்துறை சாh;பில் பொங்கல் கலை விழாவும், 16-ந் தேதியன்று மசினகுடி பேருந்து நிலையத்தில் 10.30 மணி முதல் 12.30 மணிவரை கலை பண்பாட்டுத்துறை சாh;பில் பொங்கல் கலைவிழாவும், 18- தேதியன்று ஊட்டி படகு இல்லத்தில் 10.30 மணி முதல் 12.30 மணிவரை இயல், இசை நாடகமன்றம் சார்பில் கலைச்சங்கமமும் நடைபெறுகிறது. எனவே மேற்படி, நிகழ்ச்சிகளில் பொதுமக்கள் அனைவரும் கலந்துகொண்டு பொங்கல் திருவிழாவினை சிறப்பிக்குமாறு நீலகிரி மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.;

# நந்தா கல்வி நிறுவனங்களில் பொங்கல் விழா



ஈரோடு ஜன 14-

ஈரோடு நந்தா கல்வி நிறுவனங்களான மருத்துவம், பல் மருத்துவம், இந்திய மருத்துவங்கள், பொறியியல் மற்றும் தொழில் நுடபம், பாலிடெக்னிக் கல்வியியல், கலை மற்றும் அறிவியல். சென்டரல் பள்ளி வளாகங்களில் தமிழகின் பாரம்பரிய உழவர் திருநாளான ‘‘பொங்கல் திருவிழா’’ கொண்டாடப்பட்டது.

இதனை முன்னிட்டு நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகம், நத்தா தொழில் நுட்ப வளாகம் மற்றும் சென்டரல் பள்ளி வளாகங்களில் நடைபெற்று தமிழர் விழாவிற்கு ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி.சண்முகன் தலைமையேற்றுத் துவக்கி வைத்தார்.

மேலும் இவ்விழாவிற்கு, கோபிசெட்டிபாளையம் இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சிலின் தலைவரும், முதன்மை விஞ்ஞானியுமான முனைவர் பி. அழகேசன் பேசுகையில், தமிழர் திருநாளை இளைய தலைமுறையினர் போற்றுவது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. பொங்கல் விழாவின் பாரம்பரிய வழிபாட்டு முறைகளையும், சடங்கு முறைகளையும் நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்திய மாணவர்களுக்கு தனது நன்றியினைத் தெரிவித்தார்.இதனை தொடர்ந்து, ஈரோடு நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் பெண்களின் மனம் கவர்ந்த மருதாணி இடுதல், பொங்கல் பானைகளை அலங்கரித்தல், கோலமிடுதல், ஆண்களின் தப்பாட்டம், சலங்கை ஆட்டம், கும்மியாட்டம், கோலாட்டம், வழுக்கு மரம் ஏறுதல், கபடி, குழுநடனம், தனிநபர் நடனம் போன்ற தமிழ்ப் பாரம்பரியத்தை பறைசாட்டும் விதமாக பல்வேறு வகையான நிகழ்ச்சி கள்நடைபெற்றன.இதுபோல நந்தா தொழில்நுட்ப வளாகத்தில் நடைபெற்ற தமிழரின் கலாசார விழாவில் மதுரை மாவட்டத்திலிருந்து வரவழைக்கப்பட்ட கலைஞர்களின் பொய்கால் குதிரை, ஒயிலாட்டம், காவடியாட்டம், சிலம்பாட்டம், போன்ற பல்வேறு வகையான பாரம்பரிய கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இதனைத் தொடர்ந்து, தமிழரின் பாரம்பரியத்தினை பரைசாற்றும் சிலமபம், கயிறு இழுத்தல், ரங்கோலி, பல்லாங்குழி. உறியடித்தல் போன்ற பல்வேறு விளையாட்டு போட்டிகளில் மாணவ-மாணவிகள் மிகவும் ஆர்வமுடன் கலந்து கொண்டு சமத்துவ பொங்கலிட்டு மகிழ்ச்சி ஆரவாரம் பொங்கிட கொண்டாடினார்கள்.நிகழ்வுகளின் முடிவில் வெற்றிப் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி.சண்முகன் மற்றும் சிறப்பு விருந்தினர் முதன்மை விஞ்ஞானி முனைவர் பி. அழகேசன் ஆகியோர் வழங்கினார்கள் .

விழாவினை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்த கல்லூரி மற்றும் பள்ளிகள் முதல்வர்கள், நிர்வாக அலுவலர்கள், ஒருங்கிணைப்பாளர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகன், செயலர் எஸ். நந்தகுமார் பிரதீப், மற்றும் நந்தா கல்வி நிறுவனங்களின் செயலர் . எஸ். திருமூர்த்தி ஆகியோர் தனது பாராட்டுகளைத் தெரிவித்தார்கள்.

# ஊட்டி ஒய்.எம்.சி.ஏ. பள்ளியில் சமத்துவ பொங்கல் விழா



ஊட்டி, ஜன.14-

ஊட்டியில் ஒய்எம்சிஏ பள்ளியில் சமத்துவ பொங்கல் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

ஒய் எம்சிஏ மற்றும் பாவேந்தர் இலக்கியப் பேரவை சார்பாக சமத்துவப் பொங்கல் தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கியது. ஒய்எம்சிஏ பள்ளி மாணவ மாணவியர் திருக்குறள் ஒப்புவித்தல் மற்றும் கலைநிகழ்ச்சிகள் பெற்றோர்கள் பங்கேற்ற வண்ணக்கோலப் போட்டி நடைப்பெற்றது. ஒய்எம்சிஏ செயலர் மேக்ஸ் வில்லியர்ட் ஜெயப்பிரகாஸ் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஒய்எம்சிஏ பள்ளி தாளாளர் லேம்பர்ட் வரவேற்புரை நிகழ்த்தினர். பாவேந்தர் இலக்கியப் பேரவை சார்பாக கவிஞர் ஜனார்தனன், நீலமலை ஜேபி, ச. இரமேஸ், முனிசுவரி ஆகியோர் கவிதைகளை வாசித்தனர். இனிய பொங்கல் அனைவருக்கும் வழங்கப்பட பள்ளி மாணவ மாணவியருக்கு பரிசுப்பொருட்கள் வழங்கப்பட்டது.

ஒய்எம்சிஏ தலைவர் ஸ்டீபன் சந்தோஸ்குமார் வாழ்த்துரை வழங்கினார். துணைத்துலைவர் சார்லஸ் பொங்கலின் சிறப்பை எடுத்துரைத்தார். உழவின் பெருமையை துணைத்தலைவர் தனசிங் விழாவில் எடுத்துரைத்தார். நிகழ்ச்சியை தமிழாசிரியை ரம்யா தொகுத்து வழங்கிட ஆசிரியை பிரியங்கா நன்றி நவில நாட்டுப்பண்ணுடன் விழா நிறைவு பெற்றது.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# நீலகிரி கூட்டுறவுத்துறையில் சமத்துவ பொங்கல் விழா: இணைப்பதிவாளர் டாக்டர் சித்ரா தலைமையில் நடந்தது



ஊட்டி, ஜன.14-

நீலகிரி மாவட்டம் ஊட்டியில் உள்ள மண்டல இணைப்பதிவாளர் அலுவலக வளாகம் மற்றும் தொட்டபெட்டா தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் ஆகிய இடங்களில் கூட்டுறவுத்துறை சார்பில் சமத்துவ பொங்கல் விழா நிகழ்ச்சி மண்டல இணைப்பதிவாளர் டாக்டர் சித்ரா தலைமையில் நடைபெற்றது. விழாவில் கூட்டுறவுத்துறை பணியாளர்கள் மற்றும் சங்க உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டு பல வண்ணங்களில் கோலமிட்டு, பொங்கல் பானையில் பொங்கலிட்டு, பூஜை செய்து அனைவருக்கும் வழங்கினர்.இந்நிகழ்ச்சிகளில் துணைப்பதிவாளர்கள் அஜித்குமார், கமல்சேட், அய்யனார், முத்துக்குமார், நீலகிரி மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தின் செயலாட்சிளர் கௌரிசங்கர், கூட்டுறவு சார்பதிவாளர்கள், தொட்டபெட்டா சங்க செயலாளர் ராஜ்குமார், எழுத்தர் சாருகான், சங்க பணியாளர்கள், சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டு பொங்கல் விழாவை கொண்டனர்.

